கேட்கலாம் என்று முடிவெடுத்தோம். பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பெயரில் 'சீரோ' அவரில் எழுந்து கேள்விகள் கேட்கக் கூடாது என்றுதான் முடிவெடுத்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத் தான் சொன்னேன். திரு. அழகரிசாமி அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டும் உரிமையை நான் பறிக்க விரும்பவில்லை. பறிக்க முடியாது. உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் கேட்கவேண்டுமானால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல், 'சீரோ அவர்' முடிந்தவுடன், எல்லோரும் எழுந்து பிரச்னைகள் எழுப்புகின்றபோது, பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையிலே பல பிரச்னைகள் பற்றி கேட்கும்போது, யாரை அழைப்பது என்பதிலே சங்கடம் ஏற்படுவதால், முன்வரிசையிலே இருக்கக்கூடிய எதிர்க் கட்சித் தலைவர்கள் மூலமாக எழுப்ப வேண்டும் என்று முடிவு எடுத்தோம். இது இந்த நேரத்திற்கு மட்டும் தான். மற்ற நேரங்களில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். இதைப்பற்றி முதலிலேயே திரு. அம்பிகாபதி அவர்களுக்கு திரு. அழகரிசாமி அவர்கள் சொல்லியிருந்தால், இப்போது எழுந்திருக்க மாட்டார். இப்போது காங்கிரஸ் உறுப்பினர் துரை முத்துசாமி.

3. தகவல் கோரல்.

(அ) தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறப்பது குறித்து.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டையிலே உள்ள கொடிக் கம்பத்தில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைய பத்திரிகையைப் பார்த்திருந்தால் தெரிந்து இருக்கும். மலேசியா அரசர் இறந்ததற்கு, அனுதாபம் தெரிவிக்கின்ற வகையில் நம்முடைய அரசு தேசீயக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விட்டிருக்கிறது.

(ஆ) அரசு ஊழியர்கள் போராட்டம் குறித்து.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் தொடர்ந்து பல நாட்களாக போராட்டம் நடத்திக் கொண்டு வருகிறார்கள்; அரசுக்கும் தெரியும். நான் இது குறித்து

ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதை அனுமதித்து, இப்போதே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என் ஆய்வில் இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், திரு. சாதிக் பாட்சா அவர்கள் எழுப்பிய பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. என்னுடைய கருத்தை ஒரு நிமிடத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு உறுப்பினர்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முடிந்துவிட்டப் பிரச்னை. இப்பிரச்னை கிளப்பப்பட்டு, விளக்கம் கொடுக்கப் பட்டு விட்டது. தயவு செய்து உட்காருங்கள்.

[முற்பகல் 10-10]

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் மீது தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையில் எனது தீர்ப்பு.

நேற்று (30—3—1979) திரு. சுப்பு அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை அவையில் எழுப்பினார். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்தார். இப்பிரச்னை குறித்து எனது தீர்ப்பு :

பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பைத் தொடர்ந்தே காவல்துறை தலைமை அதிகாரி அத்துறை குறித்த சீரமைப்பு பற்றி விளக்கம் அளித்தார் என்பது புலனாகிறது. எனவே, இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தீர்ப்புக்கு மேல் அப்பீல் கிடையாது. அப்படி இருக்கும்போது கொஞ்சம் நிதானமாக தீர்ப்பைக் கொடுக்கக் கூடாதா ? இப்படி ஓட வேண்டுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்களைப் பற்றித் தெரியும். அதனால்தான் அவசரம் அவசரமாக **படித்தேன்.